21-05-2012 **அன்று நடந்த உரையாடலின் பொழிப்பு**

**தலைப்பு : ஈழத்துத் தமிழ்ச் சினிமா: இலக்கும் மூலோபாயமும்**

**தொடக்கவுரையாடல் : கா. ஞானதாஸ்**

ஈழத்துத் தமிழ்ச் சினிமாவிற்கான முதற்படிநிலை போர் உச்சம் பெற்றிருந்த 90 களின் முற்பகுதியில் வீடியோப் படப்பிடிப்புக் கருவிகளின் துணைகொண்டு சில தனி நபர்களால் தன்னார்வமாக ஆரம்பிக்கப்பட்டது. அந்த மரபின் தோடர்ச்சியாக இன்றுவரை ஈழத்துத் தமிழ் பேசும் மக்களால் உலகெங்கும் தொடரப்படும் கட்புல ஊடக செயற்பாடுகளை ஈழத்துத் தமிழ்ச் சினிமா எனக் குறிக்கலாம்.

தன்னார்வ முயற்சிகளாகவும், சுய வெளிப்பாடு, மற்றும் சுய அடையாளத்துக்கான செயற்பாடாகவும் தனிநபர்களினால் ஆரம்பிக்கப்பட்ட உதிரியான சினிமா முயற்சிகளுக்குத் தமிழ்த் தேசிய அரசியற் சித்தாந்தமும், புத்திஜீவிகள் ஆர்வம் கொண்டிருந்த மாற்றுச்சினிமாக் கோட்பாடும் கைகொடுத்தது. இதுவே பின்னர், ஈழத்துத் தமிழ்ச் சினிமா’என்னும் கோட்பாடாக அல்லது கனவாக மாறிற்று.

ஈழத்துத் தமிழ்ச் சினிமாவிற்கான மூன்று வகையிலான வாய்ப்புக்களைப் பிரதானமாக அடையாளம் காணக்கூடியதாக உள்ளது:

1. இந்தியச் சினிமா விட்டுச் செல்லும் இடைவெளியின் அடிப்படையிலான வாய்ப்பு. அதாவது, தனது பார்ப்போருக்கான ‘மனக்கிளர்ச்சி அனுபவத்தினைக்’ கொடுப்பதில் இந்தியச் சினிமாவிற்கு உள்ள போதாமை.

2. புதிய கதைகளைப் பார்ப்பதற்கும், கேட்பதற்கும் உலகச் சினிமாப் பார்ப்போரிடத்து உள்ள ஆர்வம்.

3. கடந்த முப்பது ஆண்டுகால போராட்ட வாழ்வில் நடந்த விடயங்களை அறிவதற்கும், அவற்றை மீட்டுப் பார்ப்பதற்கும் ஈழத்துப் பார்ப்போர் மத்தியிலும், தமிழ் நாட்டு மக்களிடத்திலும் உள்ள தீராத ஆர்வம்.

ஈழத்துத் தமிழ்ச் சினிமாவிற்கான வடிவமானது, மேலும், மேலும் செலவுப் பரிமாணத்தைக் குறைத்துக் கொண்டு போவதற்கான உற்பத்தி முறைமையினை உள்வாங்கிக் கொள்ள வேண்டியுள்ளது.

குறைந்த செலவிலான படத் தயாரிப்புக்கள் வெற்றியடையச் செந்நெறிக் கதைக் கட்டமைப்புக்களே (Classical Story Structure) உகந்ததாக உள்ளன. உலக சினிமாக்களாயினும் சரி, இந்திய விதிவிலக்குச் சினிமாக்களாயினும் சரி அவற்றின் குறைந்த செலவுப்படங்களின் வெற்றியின் பின்னணியில் செந்நெறிக் கதைக் கட்டமைப்பினைக் காணக்கூடியதாக உள்ளது.

ஈழத்துத் தமிழ்ச் சினிமாவானது ஏற்கெனவே தான் உருவாக்கிக் கொண்ட சில சாதகமான தனித்தன்மைகளைத் தொடர்ந்து தன்னகத்தே கொண்டிருக்க வேண்டியுள்ளது. தமிழ்த் தேசியம் அல்லது அதற்கான குரல் என்பதிலிருந்து

ஒடுக்கப்பட்டோரின் குரலாக அல்லது சுதந்திரம் அற்ற இனங்களின் குரலாக அது விரிவடைய வேண்டியுள்ளது.

யதார்த்த வடிவம், அதன் உண்மைத் தன்மை ஆகிய சாதகமான தனித்தன்மைகளை மேலும் வளர்க்கவும் செம்மைப்படுத்தவும் வேண்டியுள்ளது.

புதிய கதைகள், அனுபவங்கள் என்பவை முக்கியமானவை. இது ஈழத்துச் சினிமாவிற்கான பிரதான சாதக அம்சமாகும்.

மிகுதி அடுத்த பக்கம்

**அடுத்து வரும் தலைப்புக்கள்**

**நேபாள மாஓவாதிகள்: தோற்றமும் வளர்ச்சியும் மாற்றமும்**
தெ. ஞா. மீநிலங்கோ | 28-06-2012

**நீர் அரசியல்**
மு. மயூரன் | 05-07-2012



தாவீது அடிகள்

*கலாநிதி தாவீது அடிகள் (Revd. Fr. H.S. David, 1907 - சூன் 2, 1981) யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தமிழறிஞர். சொற்பிறப்பியல் ஆய்வாளர். பன்மொழி வித்தகர்.*

*நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசரின் உந்துதலால் சமஸ்கிருத மொழியைக் கற்று புலமை அடைந்து அதில் முதுகலைமாணிப் பட்டத்தினை லண்டன் பல்கலைக்கழகத்தில் பெற்றுக் கொண்டார். அதனைத் தொடர்ந்து கீழைத்தேசத்தில் முக்கியமாக வாழும் மொழிகளையும் மேலைத்தேசத்தில் முக்கிய வாழும் மொழிகளையும் கற்கத் தொடங்கினார். அதனைத் தொடர்ந்து தமிழ் மொழியை மையமாக வைத்து மற்றைய மொழிகளோடு ஒப்பீடு ஆய்வு செய்து, சுவாமி ஞானப்பிரகாசர் ஆரம்பித்து வைத்த ஒப்பீட்டுச் சொற்பிறப்பியல் அகராதிகளைப் பின்பற்றி தானும் ஒப்பீட்டுச் சொற்பிறப்பியல் அகராதிகளை 1970 ஆம் ஆண்டு தொடக்கம் பல பாகங்களாக வெளியிட்டுள்ளார். அவற்றை விடத் தனி நூல்களையும் எழுதி வெளியிட்டுள்ளார். அவற்றுள் ஒன்று "We stand for...' என்பதாகும்.*

*1981 மே 31-சூன் 1 நள்ளிரவில் யாழ்ப்பாணப் பொது நூலகம் எரியூட்டப்பட்ட செய்தியைக் கேள்வியுற்ற பின் அடிகளார் உறக்கத்திற்குச் சென்றார். நித்திரைக்குச் சென்ற அவர் அடுத்தநாள் 1981 சூன் 2 விடியற்காலை காலமானார். நூலகம் எரியூட்டப்பட்ட செய்தியைக் கேட்ட அதிர்ச்சியினாலேயே அடிகளார் உயிர் நீத்தார் என்று சுட்டிக்காட்டப்பட்டது*

**சமூக விஞ்ஞான கற்கை வட்டம்**

**சமகால அரசியலிலும் சமூக வாழ்விலும் தொழிநுட்பத்திலும் நிகழும் முக்கிய நடப்புக்களை ஆழமாகக் கற்றறிந்துகொள்ளுமுகமாக வாரம் தோறும் வியாழக்கிழமைகளில் பிற்பகல் 5.30 மணிக்கு சமூக விஞ்ஞானக் கற்கை வட்டம் கூடுகிறது.**

**அரசியல், தொழிநுட்பம், சமூகம் எனப் பல்வேறு பரப்புக்களில் தெரிவு செய்யப்படும் தலைப்புக்களில் ஒவ்வொரு வாரமும் ஆழமான திறந்த கலந்துரையாடல் இடம்பெறும்.**

**நாம் வாழும் இந்தச் சமூகத்தைக் கற்றறிந்து புரிந்துகொள்ளவும் அப்புரிதலிலிருந்து இச்சமூகத்தை வளர்த்தெடுக்கவும் உங்கள் அனைவரையும் சமூக விஞ்ஞான கற்கை வட்டம் அழைக்கிறது.**

சமூக விஞ்ஞான கற்கை வட்டம்
தேசிய கலை இலக்கியப் பேரவை,
571/15. காலி வீதி,
வெள்ளவத்தை

0772307807
0772260165

**Facebook group :**
facebook.com/groups/ssscircle/

வலைத்தளம் :
circle.thulaa.net

## ஈழத்துத் தமிழ்ச் சினிமா: இலக்கும் மூலோபாயமும்

முன்பக்கத் தொடர்ச்சி..

ஈழத்துச் சினிமா கொண்டிருக்கும் அம்சங்களான, பிரசாரத் தன்மை, சூழ்நிலைகளால் செயற்படுத்தப்படும் பாத்திரப் படைப்புக்கள், கதைகளில் கறுப்பு, வெள்ளை போன்ற பாகுபாட்டுத் தன்மை, அளவுக்கதிகமான வெளித்தகவல்கள்

*(Exposition),* நடிப்பில் நாடகத் தன்மை, இறுக்கமான உடல்மொழி போன்ற விடயங்களில் இருந்தும் ஈழத்துத் தமிழ்ச் சினிமா தன்னை விடுவித்துக் கொள்ள வேண்டியதாகவும் உள்ளது.

'மனநிலை' உருவாக்க உத்திகளும், அதற்காக இந்தியச் சினிமா செய்யும் பிரம்மாண்டங்களும், யதார்த்தத்துக்கு அப்பாற்பட்ட புனைகதைகள், நட்சத்திரப் பிரபல்யங்களில் தங்கியிருத்தல் அல்லது நடிகர்களையும், படைப்பாளிகளையும் மக்கள் வேறொரு தளத்தில் இருந்து பார்ப்பதான நிலையை ஏற்படுத்தல் போன்றவாறான விடயங்கள் இந்தியச் சினிமாவில் இருந்து எடுத்துக் கொள்ளக் கூடாததும், விலக்கப்பட வேண்டியதுமான அம்சங்களாகும்.


### நேபாள மாஓவாதிகள் : தோற்றமும் வளர்ச்சியும் மாற்றமும்

(இந்த வாரம் கலந்துரையாடப்படவுள்ள விடயப்பரப்பு )

*1996 முதல் 2008 தொடர்ச்சியாகப் பன்னிரண்டு ஆண்டுகளாக நேபாளம் முழுவதும் மக்கள் யுத்தத்தை நடத்தி 2008 இல் நடைபெற்ற அரசியல் நிர்ணயசபைத் தேர்தலில் வெற்றிபெற்று ஆட்சியை கைப்பற்றிய மாஓவாதிகளால் புரட்சிகரப் பாதையில் நாட்டை முன்னேற்றுவதிலும் அவர்கள் ஒப்பமிட்ட அமைதி உடன்படிக்கையைச் சரியான முடிவுக்குக் கொண்டுவருவதிலும்; ஏற்பட்ட இடர்கள், அந்நியத் தலையீடுகள் என்பன இன்றைய மூன்றாமுலக நாடுகளிற்கு குறிப்பாக தென்கிழக்காசிய நாடுகளின் பூகோள அரசியலின் தன்மைக்கு உரிய நிகழ்நிலை உதாரணமாகிறது. ஆயத பலத்தால் மட்டும் எதையும் வென்றுவிடமுடியாது என்பதை நிருபித்தவர்கள் மாஓவாதிகள். அதேவேளை ஆண்டாண்டு காலமாய் இருந்துவந்த நிலமானிய ஆட்சிக்கட்டமைப்பை தகர்ப்பதிலும் ஆட்சி அதிகாரத்திலும் நிர்வாகத்திலும் புதிய முறைகளை செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதிலும் ஏற்பட்ட சிக்கல்களும் தாமதங்களும் குறுக்கீடுகளும் நேபாள மாஓவாதிகளுக்குப் பாரிய பின்னடைவை ஏற்படுத்தியுள்ளன. இதன் பின்னணியில் நேபாள மாஓவாதிகள் பற்றிய இக்கலந்துரையாடல் கீழ்க்கண்ட விடயப் பரப்புகளை மையப்படுத்தும்.*

1. நேபாளம்: வரலாற்றுரீதியாலான நோக்கு
2. நேபாளத்தில் மாஓவாதிகள் புரட்சியை முன்னெடுக்க ஏதுவான காரணிகள்
3. 'மக்கள் யுத்தம்' வெற்றிகரமாக முன்னேற உதவிய காரணிகள்
4. களத்திலிருந்து பேச்சுக்கட்டான மாற்றத்தைக் கையாளல்
5. அதிகாரத்தை தக்கவைப்பதற்குச் சவால்களும் அந்நியத் தலையீடுகளும்
6. மாஓவாதக் கட்சியில் ஏற்பட்டுள்ள பிளவு:"ஜனநாயகக் குடியரசும்", "மக்கள் ஜனநாயகமும்"

## யாராகவோ ஆகிவிட்ட கவிஞன்



கவிஞனாகவே
வாழ நினைத்து
கவிஞனாகவும்
வாழ முயற்சித்து
யாராகவோ
ஆகிவிட்ட கவிஞன்
தனது நாட்குறிப்பை
திரும்பிப்பார்க்கிறான்...

அது வரவு செலவு
கணக்குகளாய்
நிரம்பிக்கிடக்கிறது...

இரவு நேர பணியாலும்,
கூடுதல் நேர வேலையாலும்
கவிஞனுடைய
மொட்டை மாடியும்,
நிலவொளியும்
துணிகள் உலர்த்தவும்,
செல்போன்-ல்
சிக்னல் குறைவிட்குமாய்
காவு வாங்கப்பட்டிருந்தன...

வேலை நிமித்த
வெளியூர் பயணங்களில்
ஓயாத 'அழைப்புகளில்'சிக்கி
கவிஞனின் ஜன்னலோரங்கள்
வாந்தி எடுக்கவும்,
எச்சில் துப்பவும்,
வேண்டாதவை
வீசியெறியவுமாய்
கிழித்தெறியப்பட்டிருந்தன...

அலுவல் கடிதங்களையும்,
வரைவுகளையும்
மேலேழுதுவதன் மூலம்
அடிபட்டு மறைந்து போயிருந்தன
எழுதப்படாமல் விடப்பட்ட
கவிதைகள் ...

மொழிபெயர்க்க ஆளின்றி
கண்ணெதிரில்
நிகழ்ந்துகொண்டேயிருந்தன
அங்கீகரிக்கப்படாத
எத்தனையோ கவிதைகள்...

-யோவ்
www.kannam.com

## பாடிப்பறை - ஆடி 2012

*நேரம் : மாலை 4.30 - 6.30 வரை*
*திகதி : 03-07-2012 செவ்வாய்க்கிழமை (பௌர்ணமி விடுமுறை)*

இடம் : தேசிய கலை இலக்கியப் பேரவை

* ஆய்வுரை : "தமிழில் சொல்லிசை" - மு. மயூரன்
* மொழிபெயர்ப்புக் கவிதை : "புரட்சி" -
* பாடல்கள்

கவியரங்கம்

1. முறிந்த சிறகும் முளைக்கும்
அ. ஹரிஷன்

2. விம்பங்களின் உடைவு
க. ஆதித்த வர்மன்

3. நீண்ட இரவும் நிறையக் கனவும்
ரா. வைஷ்ணவி

4. புல் நுனியில் இருப்பவன்
தி. அனோஜன்



சமூக விஞ்ஞான கற்கை வட்டத்தின் செய்தி மடல்களைப் படியெடுக்கவும் அச்சிட்டுப் பகிரவும் அனைவருக்கும் உரிமையுண்டு.
இதில் வெளிவரும் ஆக்கங்களை மூலத்தைக் குறிப்பிட்டு எங்கும் பிரசுரிக்கலாம்.